செ.வெ.எண்.78 நாள்: 28.09.2020

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் 52 நபர்களுக்கு ரூ.8.79 லட்சம் மதிப்புள்ள காதொலி கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகள் மற்றும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு நினைவூட்டல் பெட்டகங்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (28.09.2020) நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு, 52 நபர்களுக்கு தலா ரூ.16,900/- என மொத்தம் ரூ.8.79 லட்சம் மதிப்புள்ள காதொலி கருவிகளை வழங்கினார். மேலும் ரெட்டிங்டன் தொண்டு நிறுவனம் மூலம் 10 சிறப்பு பள்ளிகளில் பயிலும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு 20 நினைவூட்டல் பெட்டகங்களையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.கே.பி.பிரமநாயகம் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.